**சுருக்கம்**

நிலம் – சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டம் – ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாக உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குதல் மற்றும் ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்புகளாக உள்ள ஆக்ரமணங்களை அகற்றி மாற்று இடம் கண்டறிந்து தகுதியான பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல் – ஆணை வெளியிடப்பட்டது –சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தினை 31.08.2026 முதல் மேலும் ஒரு ஆண்டு காலம் நீட்டிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**நில முடிவு அலகு [நிமு.1(2)] பிரிவு**

**அரசாணை (நிலை) எண்.663** | **நாள்: 27.08.2026**

**பராபவ வருடம், ஆவணி 10**
**திருவள்ளுவர் ஆண்டு 2057**

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.465, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 27.11.2018.
2. அரசாணை (நிலை) எண்.496, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 24.12.2018.
3. அரசாணை (நிலை) எண்.318, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 30.08.2019.
4. அரசாணை (நிலை) எண்.480, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 11.09.2020.
5. அரசாணை (நிலை) எண்.567, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 17.09.2021.
6. அரசாணை (நிலை) எண்.462, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 23.09.2022.
7. அரசாணை (நிலை) எண்.526, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 19.10.2023.
8. அரசாணை (நிலை) எண்.368, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 19.09.2024.
9. அரசாணை (நிலை) எண்.687, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 30.09.2025.
10. நில நிருவாக ஆணையரின் கடித எண்.எப்3/11612268/2018, நாள் 15.07.2026.

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நீர்நிலைகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் ஏழை மக்களுக்கு நிரந்தர வீடு வழங்க வேண்டும் என்பதற்காகவும், இத்தகைய நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து

/த.பி.பா/

மீட்டெடுத்து உரிய செயல்பாட்டுக்கு உட்படுத்துவதற்காகவும், சம்மந்தப்பட்ட கிராமங்களில் வருவாய்த்துறையின் மூலமாக தனியார் நிலங்களை கையகப்படுத்தி, ஏழை குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் ஒரு சிறப்பு திட்டத்தைச் சில நெறிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கும் மேலான குடியிருப்பு ஆக்ரமணங்களைச் சில நெறிமுறைகளுக்கு உட்பட்டு, வரன்முறைப்படுத்தி, தகுதியான பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாவை இலவசமாக வழங்கும் ஒரு சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நிலையில், சிறப்பு வரன்முறைப்படுத்தும் இத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து, இத்திட்டங்களை சீரமைத்து, செயல்பாட்டை தீவிரப்படுத்த மேலும் கால அவகாசம் வழங்க அரசு முடிவு செய்து, அதன்படி, சில நெறிமுறைகளுக்கு உட்பட்டு இத்திட்டங்களை செயல்படுத்த மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. மேற்படி சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டமானது, ஒவ்வொரு வருடமும் கால நீட்டிப்பு செய்யப்பட்டு, கடைசியாக மேலே ஒன்பதாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 30.8.2026 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. மேலே பத்தாவதாகப் படிக்கப்பட்ட நில நிருவாக ஆணையரின் கடிதத்தில், மேற்படி சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், தகுதியான பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்கு குறிப்பாக திருச்சிராப்பள்ளி, தருமபுரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து முன்மொழிவுகள் வரப்பெற்று பரிசீலனையில் உள்ளது என்றும், சில முன்மொழிவுகள் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, அரசாணைகளை எதிர்நோக்கி நிலுவையில் உள்ளது என்றும், எனவே, ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாக உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்கள்ளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கவும், ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு புலங்களில் குடியிருப்புகளாக உள்ள ஆக்ரமணங்களை அகற்றி தகுதியான பயனாளிகளுக்கு மாற்று இடம் கண்டறிந்து வீட்டுமனைப் பட்டா வழங்கவும், இச்சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தினை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்து, மேற்படி சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தினை 31.8.2026 முதல் மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்து உரிய ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்காணும் சூழ்நிலையில், நில நிருவாக ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, மேற்காண் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலமாக உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கவும், ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு புலங்களில் குடியிருப்புகளாக உள்ள ஆக்ரமணங்களை அகற்றி, தகுதியான பயனாளிகளுக்கு மாற்று இடம் கண்டறிந்து வீட்டுமனைப் பட்டா வழங்கவும், இச்சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தினை 31.08.2026 முதல் மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பு செய்யலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**கே.எஸ். பழனிசாமி**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**

நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள்,
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், சென்னை–9.

**நகல்:–**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 09.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–09.
அரசு தலைமைச் செயலாளரின், முதன்மை தனிச் செயலாளர், சென்னை –09.
அரசு செயலாளரின், முதுநிலை தனிச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09.
அரசாணை (நிலை) எண். 318, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை,
நாள் 30.08.2019.
இருப்பு கோப்பு / உதிரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்
27/8/2026